அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும்

# ஆக.1 முதல் 230 புதிய ஷேர் டாக்சி சேவை

அதிகாரி தகவல்



சென்னை, ஜூலை 12: சென்னையில் உள்ள அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் ஆகஸ்ட் 1 முதல் 230 புதிய ஷேர் டாக்சி சேவை தொடங்கப்பட உள்ளதாக மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சென்னையில் 45.1 கி.மீட்டர் தூரத்தில் 32 மெட்ரோ ரயில் நிலையங்கள் செயல்பட்டு வருகிறது. இவற்றில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் மாதம் முதல் தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் இருந்து அலுவலகம் மற்றும் வீடுகளுக்கு செல்பவர்களுக்கு ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவையை நிர்வாகம் தொடங்கியது.

அதன்படி, எழும்பூர், டி.எம்.எஸ், அண்ணாநகர் கிழக்கு, கோயம்பேடு, ஆலந்தூர், வடபழனி ஆகிய 6 ரயில் நிலையங்களில் இருந்து ஷேர் டாக்சி சேவை செயல்படுகிறது. இதேபோல், கிண்டி, திருமங்கலம், ஆலந்தூர், சின்னமலை, ஈக்காட்டுதாங்கல், கோயம்பேடு, பரங்கிமலை ஆகிய 7 ரயில் நிலையங்களில்இருந்துஷேர் ஆட்டோ சேவையும் செயல்படுகிறது. ரயில் நிலையத்தில் இருந்து 3 கி.மீட்டர் தூரம் வரை மட்டுமே இச்சேவை செயல்படுத்தப்படுகிறது. ஷேர் ஆட்டோவில் கட்டணமாக ₹5ம், ஷேர் டாக்சியில் கட்டணமாக ₹10ம் வசூல் செய்யப்படுகிறது. இவற்றில் கடந்த ஆண்டு ஆகஸ்ட் முதல் ஜூன் வரை 3 லட்சத்து 95,113 பேர் பயணம் செய்துள்ளனர்.

இந்நிலையில், அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் இச்சேவையை விரிவு படுத்த மெட்ரோ ரயில் நிர்வாகம் திட்டமிட்டது. அதன்படி வரும் ஆகஸ்ட் மாதம் முதல் கூடுதலாக 230 ஷேர் டாக்சிகள் ஒப்பந்தம் செய்யப்பட்டு இந்த சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளது.

இதுகுறித்து மெட்ரோ ரயில் அதிகாரி ஒருவர் கூறியதாவது:

தேர்ந்தெடுக்கப்பட்ட மெட்ரோ ரயில் நிலையங்களில் மட்டுமே தற்போது ஷேர் ஆட்டோ மற்றும் ஷேர் டாக்சி சேவை செயல்பட்டு வருகிறது. இதை அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் செயல்படுத்த நிர்வாகம் ஆலோசனை மேற்கொண்டு வந்தது. அதன்படி, வரும் ஆகஸ்ட் 1ம் தேதி முதல் அனைத்து மெட்ரோ ரயில் நிலையங்களிலும் இச்சேவை விரிவுபடுத்தப்பட உள்ளது. இதற்காக 230 ஷேர் டாக்சிகள் தனியார் நிறுவனத்திடம் ஒப்பந்தம் செய்யப்பட்டு சேவையில் ஈடுபடுத்தப்பட உள்ளன. தூரத்தை விரிவுபடுத்துவது மற்றும் கட்டணம் குறித்து ஏதும் முடிவு செய்யப்படவில்லை.